## கிறிஸ்துவின் செய்யுங்கீழ்ப்படிதல் மற்றும் படுங்கீழ்ப்படிதல் (அ) செய்யப்படுகிற கீழ்ப்படிதல் மேல் ஒரு சுருக்கவர்ணனை படிப்பு

### அறிமுகம்

A – தகப்பன் தன்னுடைய சிறிய மகனிடம் இரவு வருவதற்குள் மிகப்பெரிய அடுக்காக குவித்து வைக்கப்பட்டிருக்கும் விறகு கட்டைகளை வெட்டிபிளக்கும்படி சொன்னார். அப்படி செய்யவில்லை என்றால் அவன் தண்டிக்கப்படுவான் என்றார். அந்த விறகுகட்டைகள் மிகப்பெரிய குவியலாக இருந்தது சிறிய மகனால் ஒருபோதும் அதை செய்யமுடியாது. சிறிய மகனோடு வந்த அவனுடைய பெரிய சகோதரன் ”உனக்காக நான் இதைசெய்வேன்” என்று சொன்னான் அப்படியே செய்தான். இது கிறிஸ்துவினுடைய செய்யுங்கீழ்ப்படிதலின் ஒருபடமாக இருக்கிறது. நம்மால் ஒருபோதும் என்ன செய்யமுடியாததாக இருக்கிறதோ அதை அவர் செய்தார், நம்முடைய தோல்விக்காக தண்டணைக்கு யோக்கியதையுடைத்தாயிறுக்க நம்முடைய பெரியசகோதரர் நம் தண்டணையை சுமந்தார். அபிஷேகம்பண்ணப்பட்ட ஒருவர் பரிசுத்தமாய் ஜீவித்தார் (செய்யுங் கீழ்ப்படிதல்) மற்றும் கிருபாதாரபலியாக மரித்தார் (படுங்கீழ்ப்படிதல்) அல்லது (செய்யப்படுகிற கீழ்படிதல்). தேவனுடைய பரிசுத்த நியாயப்பிரமாணம் உரிமையுடன் கேட்டதை கிறிஸ்து நிறைவேற்றினார் மற்றும் மனோ சக்தியுடன் மற்றும் பிறகு அவர் மனிததேகத்தில் நம்முடைய கீழ்படியாமைக்கான தண்டனையாக பாடுகளைபட்டார். இது நாணயத்தின் இரண்டு பக்கங்களைப்போன்ற சங்கதியாய் உள்ளது. செய்யுங் கீழ்ப்படிதல் மற்றும் படுங்கீழ்ப்படிதல் (அ) செய்யப்படுகிற கீழ்ப்படிதல் கிறிஸ்துவில் ஒரே சீராக ஒன்றுபட்டிருக்கிறது. ஒரு நாணயத்தை ஒருவராலும் பிளக்க முடியாது மற்றும் அப்படி ஆயினும் அதனுடைய தறம் மதிப்பு அப்படியே இருக்கும். செய்யுங்கீழ்ப்படிதல் மற்றும் படுங்கீழ்ப்படிதல் (அ) செய்யப்படும் கீழ்ப்படிதல் அவ்வாறே அதைப்போலவே எவ்வளவு இயலுமோ அவ்வளவு நமக்காக இரண்டும் அவசியமாக கிறிஸ்துவில் உள்ளது. JN: 19:26-27 ல் மரியாளை பராமறிக்கும் பொறுப்பை யோவானிடம் ஒப்படைத்தபோது இயேசு நான்காவது கட்டளைக்கு கீழ்ப்படிந்ததின் மூலம் நாணயத்தின் இரண்டு பக்கங்களும் ஒரே சீராக ஒன்றினைந்து இருப்பதை உடையவர்களாய் இருக்கிறோம். மற்றும் நம்முடைய பாவங்களுக்காக சமாதான பலியாக சிலுவையில் மரித்த வேளையில் அவர் இதைச்செய்தார்.

I. கிறிஸ்து பரிசுத்த ஜீவியத்தினால் தேவன் உரிமையுடன் கேட்டதை நிறைவேற்றினார். செய்யுங் கீழ்ப்படிதல் பழைய ஏற்பாடு (லேவி: 19:2) மற்றும் புதிய ஏற்பாடு இரண்டிலேயுமே நாம் கேட்கிறோம் "ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" மத்தேயு: 5:48 நம்முடைய பால்ய பருவத்திலிருந்தே நம்முடைய இருதயத்து நினைவுகள் எல்லாம் பொல்லாத தீமையினால் நிறைந்து இருப்பினும் நம் பெரிய சகோதரர் அவசியமாக நமக்காக அடியெடுத்து வந்தார்.

A. முதலில் பத்துக்கட்டளைகள் ஆழ்ந்து யோசிப்போம். சிறிய கத்தோகிஷ்முவில் அவைகளின் வார்த்தைகளின் அமைப்பையும் மற்றும் விவரிப்பையும் நாம் பார்க்கலாம் மற்றும் கிறிஸ்து எப்படி போதித்தார் அதன்படி எப்படி வாழ்ந்தார் என்றும் நாம் பார்க்கலாம்.

- முதல் .......மத்தேயு: 4: 1-11ல் நம்முடைய கர்த்தர் சாத்தானுடைய மூன்று மிகப்பெரிய சோதனைகளை ஜெயித்ததை நாம் உடையவர்களாயிருக்கிறோம். உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக"
- இரண்டாவது கட்டளை......கெத்செமனே வில் மத்தேயு: 26: 36-39 பிதாவினுடைய நமத்தை அவர் சரியாக உபயோகிப்பதை உடையவர்களாய் உள்ளோம்.
- மூன்றாவது கட்டளை.....இயேசு யூதர்களுடைய ஜெப ஆலயத்திற்கு சென்று தவறாமல் வார்த்தையை பயன்படுத்தினார்...மாற்கு: 6: 2, லூக்கா:4 : 16.
- நான்காம்கட்டளை........இயேசு 12வயது உள்ளவராயிருந்தபோது பெற்றோர்களுக்கு கீழ்படிந்ததை யாரால் மறக்கமுடியும்: LK: 2:51.
- ஐந்தாவது கட்டளை.....அவர்களுடைய சரீரப் பிரகாரமான தேவைகளில் எல்லாம் அவர் எல்லோருக்கும் உதவுபராக மற்றும் சிநேகமாக இருந்தார் Lk:4:40.
- ஆறாவது கட்டளை.....அவர் திருமணத்தை ஆதரிப்பவராக மற்றும் விவாகரத்துவை (அ) திருமண முறிவுவை எதிர்ப்பவராக இருந்தார்: மத்தேயு:19:3-6
- ஏழாவது கட்டளை.....அவர் விருத்தியடைவதற்கு மற்றும் பாதுகாப்பிற்கு உதவினார். மத்தேயு: 5:42

❖ எட்டாவது கட்டளை.....அவர் அவருடைய சீஷர்களை பாதுகாப்பராயிருந்தார் மத்தேயு: 12:1-7.

❖ ஒன்பதாவது கட்டளை மற்றும் பத்தாவது கட்டளை......அவருக்கு தலைசாய்க்க ஒரு இடமில்லை LK: 9:58 வாங்குகிறதை தேடுவதைப்பார்க்கிலும் கொடுப்பதையே பாக்கியமாய் அவர் தேடினார்: Acts: 20:35

B. அவர் பூமிக்குறிய எல்லா அதிகாரவர்க்கத்திற்கும் கூட கீழ்படிந்தார்.

❖ மதங்களுக்கு தேவன்பேரில் ஆணையிட்டபோது அவர் சத்திய பிரமாணங்களின்படி பதிலுரைத்தார். மத்: 26: 63-64.

❖ அரசாங்கம்......அவர் கீழ்படியும்படி கட்டளையிட்டபோது மீனினுடைய வாயிலிருக்கும் வெள்ளி பணத்தை எடுத்து இராயனுக்கு வரிசெலுத்த சொன்னார். மத்: 17: 27, 22: 20-21.

❖ அவருக்குள் நம் நிமித்தம் நியாயப்பிராணம் நிறைவேற்றப்பட்டதாக அது காணப்படுகிறது. ரோமர்: 10:4.

II. நமக்காக கிறிஸ்துவின் பாடு வருத்தம், நாம் யோக்கியதையுடையதாயிருக்கிற அபராதத்தை தண்டனையை தாங்கினார், சுமந்தார். செய்யப்படும் (அ) படுங்கீழ்ப்படிதல்.

A.மனதிலே செய்யப்பட்ட வேதனை, பாடுகளின் அவர் நமக்காக கடந்து சென்றதை நினைவு கூறுங்கள் பரிசுத்த வாரத்திற்கு முன்பாக இந்த துன்பத்தை அவர் உடையவராக, அவருடைய இருதயத்திலேயும் கூட உடையராயிருந்தார், ஆனால் பரிசுத்த வாரங்களில் இதை நாம் வரைபடவிவரணமாக பார்க்கிறோம்.

❖ ஜனக்கூட்டத்தினுடைய ஆக்கினைத்தீர்ப்பு. மாற்: 15:6-15 அவனைச்சிலுவையில் அறையுங்கள்.

❖ கள்ளர்களின், அதிகாரிகளின், சிப்பாய்களின் மற்றும் வழியருகே நடந்து சென்றவர்களின் பரிகாசம் மத்: 27: 44, LK 23:35-38, மாற்கு: 15:29-30

❖ மற்றும் பிதா அவரை காப்பாற்ற வில்லை அதே அளவில் அவர் அவசியமாக ஜனங்களுடைய பாவங்களுக்காக சாகவேண்டும். மத்: 24: 46. ” நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?” மத்: 26:53. ஆனால் அவர் அப்படி செய்யவில்லை - (ஒரு

லேகியோன் அந்த காலத்தில் ரோமர்களின் இராணுவத்தில் 6000க்கும் மேல் இருந்தது)

B- அவருடைய சரீர பாடு மற்றும் துன்பங்கள்-

- ❖ பிலாத்துவுக்கு முன்னிலையில் - மத்தேயு: 27: 26-31
- ❖ ஏரோதுவுக்கு முன்னிலையில் - லூக்கா: 23:11
- ❖ யூத அதிகாரிகளுக்கு முன்னிலையில் - மத்தேயு: 27: 23 மற்றும் காய்ப்பா- மத்தேயு:26:27, மாற்கு: 14:64-65.
- ❖ முடிவாக சிலுவையின்மேல் - அவருடைய கைகள் மற்றும் பாதங்களில் ஊடுருவி பாய்ந்தது. அவர் சிலுவையின் மேல் ஆறு மணி நேரங்கள் கடும் துன்பப்பட்டார், முதலில் அவருடைய துன்பம் குறைவாக இருந்தபோது அவர் திரவப்பொருள் எதையும் குடிக்கவில்லை. அதே அளவில் அவர் முழுமையாக துன்பத்தின் பாத்திரத்தை அவசியமாக குடிக்க வேண்டியிருந்தது. மத்: 27:34 இறுதியில் அவர் பரிபூர்ணமான பிறகு "தாகமாயிருக்கிறேன் என்றார்". Jn:19:28.
- ❖ மற்றும் பிறகு அவர் மனமுவந்து மரித்தார்: மத்:27:50.

C. எல்லாம் நிறைவேற்றப்பட்டது. அவர் எல்லாவகையிலும் எல்லாநிலையிலும் சோதிக்கப்பட்டார் ஆனால் பாவம் செய்யவில்லை - எபிரே: 4:15, அவர் நமக்காக நம்முடைய பாவங்களுக்காக சாபத்தை மற்றும் தண்டனையை தாங்கினார், சுமந்தார். கலாத்: 3: 13, LK: 23:33, பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும் என்று எசேக்கியல் தீர்க்கதரிசி எச்சரிக்கிறார். "ஒன்றிலே தவறினால் எல்லா வற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" யாக்: 2:10.

- ❖ அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது கர்த்தருடைய சுருக்கதிரட்டாயிருக்கிற முதல் மற்றும் இரண்டாவது அட்டவனையை யோசனை செய்யுங்கள். ஆதியும் அந்தமும் அவரே என்பதின் மூலம் சிலுவையின் மேல் அவர் அவருடைய அன்பை பிதாவுக்கு தெரியப்படுத்தினார். மற்றும் பிறகு சிப்பாய்கள், மரியாள், கள்ளர்கள் இடையே அவர் சொல்லிய அன்பான வார்த்தைகள்.
- ❖ பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் 2 Cor 5: 21
- ❖ அவர் மரித்தார் / அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுப்பட்டார். I Pet 3: 18